தொகுதி ௨
சித்திரம் ௨

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்

# உண்மை தெரிந்தது



www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing





பகுதி-2 சித்திரம்-2

## உண்மையை அறிதல்

குன்னுடையானும், தாமரையும் பங்காளிகளினால், பொன்னிவள நாட்டை விட்டு அடித்து துரத்தப்பட்டு, வீரப்பூருக்குச் செல்கின்றனர். அங்கே சிறு குடிசையில் தங்கள் குழந்தையுடன் வாழ்கின்றனர். அதேநேரம் செல்லாத்தாவாள் வளர்க்கப்படும் அவர்களது இரு ஆண் குழந்தைகளும் செல்லாத்தவிடம் தங்களது தாய், தந்தையரை பற்றி கேட்க ஆரம்பிக்கின்றனர்...







மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.









சிவன் எனக்கு வரமாக இரண்டு ஆண் குழந்தைகளையும், ஒரு பெண் குழந்தையையும் தந்தார். ஆனால், நான் ஒரு பெண் குழந்தையை மட்டுமே பெற்றிருக்கிறேன்.
எங்களுக்கு பின் பொன்னிவள நாட்டை ஆள்வதற்கும், குடும்ப சொத்துக்களை பாதுகாப்பதற்கும் ஆண் வாரிசு இல்லாமல் போய் விட்டதே!
பரந்தாமா! எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? நான் என்ன பாவம் செய்தேன்?



இருவரும் தங்களது பெண் குழந்தையை கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டனர்.
நாதா! இன்று வெள்ளிக்கிழமை, மங்களமான நாள். நாம் குழந்தையை விநாயகர் கோவிலுக்கு அழைத்துச் செல்வோம்.
அப்படியே, நம் குலதெய்வக் கோவிலுக்கும் சென்று வரலாம்.
சரி தாமரை! முதலில் குளித்து விட்டு பின் கோவிலுக்குச் செல்வோம்.


அருகில் இருந்த குளத்தில் குளித்துவிட்டு இருவரும் கோவிலுக்குச் சென்றனர்.







அவர்கள் முதலில் விநாயகர் கோவிலுக்குச் சென்று வணங்கி விட்டு, பின் செல்லாத்தாவின் கோவிலை அடைந்தனர். குன்னுடையான் குழந்தையை செல்லாத்தாளின் காலடியில் வைத்து வணங்கினார். அப்போது தாமரை....




ம்மமாா
ம்மமாா
அனைத்து விலங்குகளையும் பாருங்கள், சிவன் அளித்த வரத்தால் பயன் பெற்று சந்தோசமாக இருக்கின்றன.
ஆனால்! எனக்கு மட்டும் ஏன்?….
ஒரு பெண் குழந்தை மட்டும் பிறந்திருக்கிறது?



என் தலை விதியால் தான் நமக்கு ஆண் குழந்தையே பிறக்க வில்லை.
இல்லை தாமரை! இது கடவுளின் செயல்.
நமக்கு ஆண் வாரிசு இல்லையென்று நினைத்து கவலைப்படாதே!
நம்முடைய ஆடு, மாடு, குதிரைகள் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து நாம் திருப்தியடைவோம்.
சரி சுவாமி!
நாம் ஊருக்குள் சென்று அந்த ஏழைப் பெண்ணின் மகனை பார்த்து வரலாம்.



இருவரும் ஊருக்குள் சென்று அப்பெண்ணின் வீட்டை அடைந்தனர்.
ஆகா! என்ன அழகான ஆண் குழந்தை!
சிவன் வரமளித்த படியே இவளுக்கு அழகாகவும், திடமாகவும் ஒரு மகனைக் கொடுத்திருக்கிறார்.
இவன் வளர்ந்து பெரியவன் ஆனதும், நமது அரண்மனையின் காவலன் ஆக்குவேன்.


இருவரும் வீடு திரும்பினர்.
நாதா!
நம் குழந்தைக்கு அழகான தொட்டில் ஒன்று செய்யவேண்டும்.
நல்லது! நான் இப்பொழுதே ஆசாரிகளை அழைத்து செய்யச் சொல்கிறேன்.


ஆசாரிகளே! குழந்தைக்கு அழகான தொட்டில் ஒன்று செய்ய வேண்டும்.
அதற்கு ஆக வேண்டியவைகளை பார்த்து, வேலையை தொடங்குங்கள்.
சரி சாமி!
ஆசாரிகள் விரைவில் வேலையை தொடங்கினர்.
சட சட சட
சட சட சட



வேலை நிறைவடைந்ததும்..
தொட்டிலை மாட்டுங்கள்.
ஆசாரிகள் வேலையை நேர்த்தியாக முடித்து விட்டு, சன்மானத்தை பெற்றுச் சென்றனர். தாமரை புதிய தொட்டிலில் குழந்தையை படுக்க வைத்தாள்.
என் கண்மணியே! நன்றாக படுத்து உறங்கு!


அதேவேளை தங்கவள நாட்டுப் பங்காளிகள் ஒன்று கூடி பொன்னிவள நாட்டை அபகரிக்க திட்டம் தீட்டினார்கள்.
வாருங்கள்! வாருங்கள்!
குன்னுடையானும், தாமரையும் இருபத்தியொரு வருட தவத்திற்குப் பிறகு குழந்தை வரம் பெற்றது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.
அதன் பலனாக ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது!
ஆகவே! பொன்னிவள நாட்டை ஆள்வதற்கு வாரிசு இல்லை.
இனிமேல், அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கப் போவதும் இல்லை.
இதுவே சரியான நேரம்! பொன்னிவள நாட்டை நாம் அபகரிப்பதற்கு!


குன்னுடையானை குடுபத்துடன் நாம் அங்கிருந்து துரத்த வேண்டும்.
பங்காளிகள் பொன்னிவள நாட்டை நோக்கி விரைந்து சென்று, விநாயகர் கோவிலை அடைந்தனர்.
குன்னுடையானின் அரண்மனைக்கு, நாம் எல்லோரும் செல்ல வேண்டாம் சிலர் மட்டும் முதலில் போவோம்.



பங்காளிகளில் சிலர் மட்டும் அரண்மனைக்குச் சென்று, வாசற் கதவை பலமாக தட்டினர்.
டமார்
டாங்
பங்காளிகள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றனர். அதைப் பார்த்து, பயந்த வேலைக்கார பெண் குடத்தை கீழே போட்டாள்.


தாமரை! எங்கே உன் கணவன்?
பங்காளிகள் தாமரையை அடிக்க தொடங்கினர்.
ஆ..! ஐயோ..!
அவளை அடித்து, உதைத்து முடியைப் பிடித்து இழுத்தனர்.
ஆ..! அடிக்காதீர்கள்! நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன்.
உடனே பொன்னிவள நாட்டை விட்டு சென்று விடுங்கள்.



அப்பொழுது குன்னுடையான் அங்கே வந்தார்.
தாமரை! என்ன நடக்கிறது இங்கே?
சண்டாளா!
செல் இங்கிருந்து!
மகா விஷ்ணுவே! இவர்கள் எங்களை இங்கிருந்து விரட்டுகிறார்களே.
எங்களை துரத்தி விட்டு எங்களின் சொத்துக்களையும், நிலங்களையும் அபகரிக்க போகிறார்கள். தயவு செய்து நீங்கள் தான் தடுக்க வேண்டும்.
தாமரை! உன் கணவனை அழைத்துக் கொண்டு இங்கிருந்து சென்று விடு.


தாமரையின் வேண்டுதலை கேட்ட விஷ்ணு, அரண்மனையை காக்க வண்டுகளை அனுப்பினார்.
ஷ்ஷ்ஷ்
ஷ்ஷ்ஷ்
தாமரையும், குன்னுடையானும் அவர்களின் குலத்தெய்வமான செல்லாத்தா கோவிலுக்கு, கோபமாக சென்றனர்.
தாயே! நீ இங்கே தான் இருக்கிறாயா? நான் தவம் செய்து, மூன்று குழந்தைகளுக்கு வரங்கள் பெற்றேன்.
ஆனால், எனக்கு பிறந்தது ஒரு பெண் குழந்தை மட்டுமே. இப்போது, பங்காளிகள் எங்களை வீட்டை விட்டும் துரத்தி விட்டார்கள்.

# உண்மையை அறிதல்




இதையெல்லாம் கேட்டும் செல்லாத்தாள் கற்சிலை போல் அமைதியாக இருந்தாள்.







அவர்கள் நகைகளை கழட்டி வைத்து விட்டு செல்வதை ஒளிந்திருந்து பார்த்த திருடன், அவைகளை திருடிச் சென்றான்.



திருடன், அவர்களின் அரண்மனைக்கும் திருடச் சென்றான். ஆனால், அங்கே காவலிருந்த வண்டுகளைப் பார்த்தும் பயந்து ஓடினான்.






# உண்மையை அறிதல்


நெடுந்தூரம் பயணம் செய்து இருவரும் அணியப்பூரைச் சென்றடைந்தனர். அங்கிருந்த விநாயகர் கோவிலின் முன் அமர்ந்தனர்.
தாமரை குழந்தையை குன்னுடையானிடம் கொடுத்து விட்டு...
தங்காளை சிறிதுநேரம் பார்த்துக் கொள்ளுங்கள்.
நான் சென்று குழந்தைக்கு எங்காவது பால் கிடைக்கிறதா என்று பார்த்து வருகிறேன்.
குழந்தை பசியோடு இருக்கிறாள்!


தாமரை அணியப்பூரின் தெரு வழியே நடந்து சென்று, அங்கு நின்ற பெண்களிடம் குழந்தைக்கு பால் கேட்டாள். ஆனால், அவர்கள் அவளை விரட்டியடித்தனர்.
தாயே! குழந்தைக்கு சிறிதளவு பால் கிடைக்குமா?
என் குழந்தை பசியால் அழுகிறது. தயவு செய்து பால் இருந்தால் தந்து உதவுங்கள்.
பாலெல்லாம் இல்லை! இங்கிருந்து போ!
தாமரை ஒவ்வொரு வீடாகச் சென்று பால் கேட்டு, கெஞ்சி அழுதாள்.
தயவுசெய்து! என் குழந்தைக்கு சிறிது பால் இருந்தால் கொடுங்கள்!



யாரோ? குழந்தைக்கு பால் கேட்டு அழும் குரல் கேட்கிறதே!
தயவு செய்து பால் இருந்தா கொடுங்கள்.
ஆ! இவர்களைப் பார்த்தால் உயர் குடியில் பிறந்தவர் போல் தெரிகிறதே! என் கணவரிடம் சொல்வோம்.
அம்மா! நீங்கள் தாமரை தானே! என்ன நடந்தது உங்களுக்கு?
தங்கவள நாட்டு பங்காளிகள் எங்களை, பொன்னிவள நாட்டை விட்டு அடித்து, விரட்டி விட்டனர்.
எங்களது நாட்டையும், சொத்துக்களையும் பறித்துக் கொண்டனர்.
பசியால் அழும் குழந்தைக்குப் பால் கிடைத்ததும். நாங்கள் வீரப்பூருக்கு செல்ல உள்ளோம்.
உங்கள் கணவர் எங்கே?
அவர், விநாயகர் கோவிலில் குழந்தையுடன் இருக்கிறார்.
பாலை வாங்கிக் கொள்ளுங்கள்.


அணியப்பூர் கவுண்டர்கள் குன்னுடையானை பார்தது, பேசிக் கொண்டிருந்தனர். தாமரை குழந்தைக்குப் பாலை புகட்டினாள்.
கவுண்டரே! நீங்கள் எங்கேயும் போக வேண்டாம். இங்கே எங்களுடன் இருந்து விடுங்கள்.
அணியப்பூர் கவுண்டர்களே! நீங்கள் கேட்டதிற்கு மிக்க மகிழ்ச்சி நாங்கள் இங்கேயிருந்தால் பங்காளிகள் மீண்டும் தொல்லை தருவார்கள்.
எங்களுக்கு வீரப்பூர் செல்வதற்கு வழியை மட்டும் காட்டுங்கள் அதுபோதும்!
சரி உங்கள் விருப்பம் போல் நாங்கள் வழியை காட்டுகிறோம்.
அவர்களுக்கு வீரப்பூர் செல்லும் வழியைக் காட்டிவிட்டு சென்றனர்.


# உண்மையை அறிதல்


தாமரையும், குன்றுடையானும் வீரப்பூருக்குச் சென்று, அங்கிருந்த கோவில் முன்பாக அமர்ந்தனர். அப்பொழுது, வேடர் குல மன்னரின் பணிப் பெண்கள் தண்ணீர் குடத்துடன் அவ்வழியே வந்தனர்.
அவர்கள் தாமரையின் குழந்தையைப் பார்த்து...
ஆ...! எவ்வளவு அழகான பெண் குழந்தை!
இந்த அழகான குழந்தையை பற்றி அரசியிடம் சென்று சொல்வோம்.
பணிப் பெண்கள் வேட்டுவ அரசரின் அரண்மனைக்கு, அரசியை காணச் சென்றனர்.


நம் ஊர் விநாயகர் கோவிலில் ஒரு கணவனும், மனைவியும்...
ஒரு அழகான பெண் குழந்தையுடன் அமர்ந்திருக்கிறார்கள்.
நீங்கள் சென்று அவர்களை அழைத்து வாருங்கள்.
பணிப்பெண்கள் விநாயகர் கோவிலுக்குச் சென்று அவர்களிடம் அரசியின் விருப்பத்தை கூறி அரண்மனைக்கு அழைத்து வந்தனர்.




வாருங்கள்! வாருங்கள்! நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?
பொன்னிவள நாட்டிலிருந்து வருகிறோம்.
அங்கே பஞ்சம் ஏற்பட்டதால் இங்கே பிழைக்க வந்திருக்கிறோம்.
மீண்டும் நிலமை சரியானவுடன். நாங்கள் பொன்னிவள நாட்டிற்கே திரும்பி சென்று விடுவோம்.
பணிப்பெண்களே! என் அண்ணனை அழைத்து வாருங்கள்.
தாமரை கூறியதை கேட்ட வேட்டுவ அரசி தன் அண்ணனை அழைத்து வரச் சொன்னாள்.
யார் இவர்கள்?


நம் விருந்தாளிகள். அவர்களுக்கு விருந்தளிக்க வேண்டும்.
இவர்கள் வீட்டில் நாம் உண்ணக் கூடாது.
இதனால், வேட்டுவ மன்னர் கோபம் கொள்வாரே.
கவலைப்படாதே! நான் பார்த்துக் கொள்கிறேன்.
உங்கள் உபசரிப்பிற்கு நன்றி!
நாங்கள் இப்பொழுது தான் உணவு உண்டோம். எங்களுக்குப் பசிக்கவில்லை.
இருவரும் உணவருந்த மறுத்து கூறிய காரணம், பொய் என்று வேட்டுவ அரசர் தெரிந்து கொண்டார்.
கவுண்டரே! நீங்கள் இங்கே உணவருந்த விரும்பாமல், “பசிக்கவில்லை” என்று பொய் சொல்கிறீர்கள். சரி போகட்டும்.
உங்களுக்கு விருப்பம் இருந்தால், என்னுடைய குதிரைக் கொட்டடியில் தங்கிக் கொள்ளுங்கள்.



அவர்கள் குதிரை கொட்டடிக்கு சென்று...
அங்கிருந்த குடிசையை சுத்தம் செய்து விட்டு ஓய்வெடுத்துக் கொண்டனர்.


கொக்கரக்கோ கோஒஒஒ
முதலில் வேலை ஒன்றை தேட வேண்டும்.
பொழுது விடிந்ததும், தாமரை எழுந்து, வேலை தோட தயாரானாள்.
வெளியே பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள். நானும் அவர்களுடன் செல்ல போகிறேன்.
ஆனால், நீ கடின வேலை செய்ததே இல்லையே!
எப்படியாவது செய்து தான் ஆக வேண்டும்.
தாமரை வேலைக்கு செல்லும் பெண்களுடன் சேர்ந்து சென்றாள்.


தாமரை அந்தப் பெண்களுடன் நெல் குத்தும் இடத்திற்கு வந்தாள். அங்கிருந்த கவுண்டர் அவளைப் பார்த்ததும் அருகில் வரும்படி அழைத்தார்.
அம்மா! நீ இங்கே வேலை செய்கிறாயா?
ஐயா! இவளோடு யாரும் வேலை செய்ய மாட்டார்கள்!
அவளுக்கு வேலையே தெரியாது!
பரவாயில்லை. நான் தனியாகவே நெல்லைக் குத்திக் கொள்கிறேன்.
விஷ்ணு, தாமரைக்கு உதவினார். அவர் அருளினால் நெல்லை மின்னல் வேகத்தில் குத்தி முடித்தாள்.
வைகுந்த வாசனே! எனக்கு உதவுங்கள்.
இவ்வளவு வேகமாக நெல் குத்துபவர்களைப் நான் பார்த்ததே இல்லை!
அவள் வேலை செய்த வேகத்தில் வியந்த கவுண்டர், தாமரைக்கு கூலியுடன் சிறிது அரிசியையும் சேர்த்துக் கொடுத்தார்.


வீட்டிற்கு திரும்பிய தாமரை….
பாருங்கள்! நான் வேலையை சரியாக செய்ததை பாராட்டி, கூலியும், அரிசியும் கிடைத்தது.
தாமரை! எப்படி வேலையை சீக்கிரம் முடித்தாய்?
எங்கே உன் கைகளை காட்டு.
தாமரையின் கைகள் சிவந்து, வெடித்திருந்தது.
இதெல்லாம் என்னால் வந்தது. இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி கஷ்டப்படப் போகிறோமோ?
கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்.

# உண்மையை அறிதல்



வருடங்கள் பல கடந்தன. இருவரும் குதிரைக் கொட்டாரத்தில் வாழப் பழகி விட்டனர். அதேசமயம், செல்லாத்தா தாமரையின் இரண்டு மகன்களையும் கண்ணும், கருத்துமாக வளர்த்து வந்தாள்.
நன்றாக தூங்குங்கள். நீங்கள் புகழ் பெற்ற காராளக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள்.
வளர்ந்து பெரிய பலசாலியாக ஆவீர்கள்.
தாயே! எதற்காக இப்படிச் சொல்கிறீர்கள்?
அப்படியானால், நீங்கள் எங்கள் உண்மையான தாய் இல்லையா?
செல்லாத்தா கூறியதை கேட்ட இரு குழந்தைகளும் உறக்கத்தில் இருந்து எழுந்தனர்.


செல்வங்களே! இனி உங்களிடம் எதையும் மறைக்க நான் விரும்பவில்லை. சொல்கிறேன். தாமரையும், குன்னுடையானும் தான் உங்களை பெற்றவர்கள். காவேரிநதி பாயும் பொன்னிவளநாடு தான் உங்களின் சொந்த நாடு.
ஆனால் பொறாமை பிடித்த பங்காளிகள் அதை அபகரித்துக் கொண்டனர்.
செல்லாத்தா அனைத்தையும் அவர்களுக்கு கூறினாள்.
தயே! உடனடியாக எங்கள் பெற்றோரை பார்க்கவேண்டும்.
நீங்கள் செய்த உதவிக்கு நாங்கள் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால்! நாங்கள் பெற்றோரை பார்க்கவேண்டும்.
சரி! நான் உங்களை அழைத்துச் செல்கிறேன்.
பங்காளிகளின் கொடுமையால் பொன்னிவள நாட்டை விட்டு தாமரையும், குன்னுடையானும் துரத்தப்பட்டனர். அத்தோடு, அவர்களுக்கு, தமக்கு பிறந்த இரு ஆண் குழந்தைகள் பற்றி எதுவும் தெரியாது. குழந்தைகள் தமது உண்மையான பெற்றோர்களை காண தவிக்கின்றனர் குன்னுடையானும், தாமரையும் அவர்களை காண்பார்களா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic15tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

ISBN 978-1-927093-56-6

© 2012 Ponnivala Publishing